செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரணஞு கார்த்திகை மீ கஉ உ வெள்ளிக்கிழமை (27-11-1970) [இலஂ-கூ

# வேதசிவாகமங்களே சைவசமய முதல் நூல்கள்

## அவற்றின் கருத்துக்களைத் திரிப்பது நாவலர் பெருமான் கொள்கைக்கு முற்றும் முரணாகும்

"நாவலர் பெருமான் சைவ சமயத்துக்கு முதல் நூல்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்ற வேதசிவாகமங்களே யெனவும், அவற்றிலே விதிக்கப்பட்டவை புண்ணியங்களெனவும் விலக்கப்பட்டவை பாவங்களெனவும் வேதசிவாகமங்களை அவமதித்தல் பாவமெனவும் விசுவசித்து ஒழுகினவர். வேதசிவாகமங்களை நிந்தித்தல் கொடிய பாவமெனவும் அவற்றின் கருத்துக்களையே தமது சமய நூல்களில் தெளிவாகக் கூறியுள்ளனர். அவற்றை அவர் திரித்துக் கூறவில்லை. ஆனால் இக்காலத்தில் சிலர் நாவலருடைய கொள்கைகளுக்கு விபரீதமான விளக்கம் அளிக்க முயல்கின்றார்கள். அது பெருந் துரோகமாகும் – இக் கூற்றுக்களைக் கேட்டுக்கொண்டும் கேளாதார்போல் வாழாவிருக்க முடியுமா?"

21-11-70 ல் யாழ். சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசை விரிவுரைக் கூட்டத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டனர்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் சிவபெருமானை வழிபட்டு முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்" என நாவலர் தமது இரண்டாம் பாலபாடத்திற் கூறியுள்ளனர் அக் குறிக்கோளை மக்கள் பின்பற்றினால் அவர்களுக்கு ஒரு வித துன்பமுமில்லை. இறைவன் திருவடியை மறவாதிருத்தல்தான் இன்பம். மறந்திருத்தல்தான் துன்பம். இவ் விதமாக வாழ்க்கையை மேற்கொள்வதற்குச் சைவ சமயம் வழிகோலியுள்ளது. அதற்காகவே மக்களைச் சைவ சமயத்தை அநுட்டிக்கும் வண்ணம் நாவலர்பெருமான் எழுத்தாலும் உரையாலும் மக்களுக்கு உபதேசித்தார். அதுவே நாவலர் காட்டிய நன்னெறி"

இவ்வாறு சைவ பரிபாலன சபை யாதரவில் நடைபெற்ற குருபூசை விழாவில் வண்ணார்பண்ணை சிவன்கோவில் தேவஸ்தான வித்துவானும் ஆசிரியருமாகிய திருப்பூங்குடி திரு. க. ஆறுமுகம் அவர்கள் உரையாற்றினர் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் செல்வன் தி. தெட்சணாமூர்த்தியும், பொ. இரகுபதியும் நாவலரைப்பற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்தொடக்கத்தில் நாவலர் சற்குரு மணிமாலையில் சில செய்யுட்கள் ஓதப்பெற்றன. கூட்டமுடிவில் சமயப்பிரசார அமைச்சர் திரு மு. மயில்வாகனம் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினர்.

---

கொழும்பு விவேகானந்த சபை நடாத்திய

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேச்சுவன்மைப் போட்டி

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் 21-11-70ல் நடாத்தப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேச்சுவன்மைப் போட்டியில் இறுதித் தேர்வில் கீழ்க்கண்ட மாணவர்கள் பரிசில் பெற்றுள்ளார்கள். மேற்பிரில் முதலிடம் பெற்ற மாணவருக்கு தங்கப் பதக்கமும்; ஏனையோருக்கு புத்தகங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. இறுதித் தேர்வில் கலந்து பரிசில் பெறாத மாணவர்களுக்கு உவந்தளிப்பும் வழங்கப்பட்டன. அத்தோடு 22-10-70 இல் நடாத்தப்பெற்ற நாவலர் கட்டுரைப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கும் புத்தகங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

(வளர்ச்சி 3 - ஆம் பக்கம்)

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ
ரையுற வேண்டா
வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத்
தோயாவாந் தீவினையே.

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

---

### நாவலர்பெருமான் குருபூசைத் தின விழா

ஷெ விழா மறவன்புலோ, கிராம முன்னேற்றச் சங்கம், மறவன்புலோ சனசமூக நிலையம் என்பவற்றின் ஆதரவில், மறவன்புலோ கி. மு சங்க மண்டபத்தில் 21-11-70 சனிக்கிழமை, தலைவர் திரு. நா. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தேவார பாராயணத்தின் பின், தலைவர் தமது உரையில், எமது புண்ணியத்தின் பேறாகச் சைவமுந் தமிழுந்தழைத்தோங்க வந்தவதரித்த நாவலர் பெருமானைப் போற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அவரது சமயப் பெரும்பணியைப் பற்றியும் விளக்கி குருபூசையைக் கொண்டாடுவதன் அவசியத்தையும் குறிப்பிட்டார்கள்.

அதையடுத்து மாணவ மாணவிகளின் பேச்சுகள் நிகழ்ந்தன.

x x x

### வண்ணை. சாந்தையர்மடம் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில்

வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் சார்பில் 27.11 70 மாலை 6 மணிமுதல் ஆறுமுக நாவலர் விழா நடைபெற்றது. விசேட பூசை, பஜனை, என்பன நடைபெற்றன. விழாவிற்கு சைவப்புலவர் திரு வ. கந்தசாமி ஆசிரியர் தலைமை வகித்தார்.

அவர் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது "நாவலர் பெருமானுக்கு நினைவு விழா எடுக்க வேண்டியது எமது தலையாய பணியாகும். சைவ மன்றங்கள் பெரு விழா எடுப்பதோடு நின்று விடாது நாவலர் பெருமான் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து அப்பணிகளை நாம் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டார். அடுத்த படியாக திரு. சா. பஞ்சாட்சர ஐயர் "நாவலர் மணிகள்" என்னும் பொருள் பற்றிப் பேசினார். நாவலரால் வெளியிடப்பட்ட நூல்களில் அச்சுப் பிழைகளைக் காண முடியாது. பிழை இன்றி நூல்களை வெளியிட்டார். சைவ வினா விடை போன்ற அரும் பெருஞ் சமய நூல்களை அச்சிற் தந்தவர் நாவலர் எனக் குறிப்பிட்டார்.

---

நாவலர் பெருமானது

## உண்மைச் சரித்திரத்தைப் பேணுவோமாக

நாவலர் பெருமான் சரித்திரம்பலவாறு திரிக்கப்படுவது வருந்தத்தக்கது. சிலர் தாம் அபிமானிக்கும் பெரியார்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கமாகவே நாவலர் பெருமானின உண்மைச் சரித்திரத்தைத் திரிக்க முற்பட்டிருக்கின்றனர். நாவலர் பிறந்த நாட்டிலே உள்ள நாம், நாவலருக்கு விழாவெடுக்கும் நாம் நாவலர் பெருமானின் உண்மைச்சரித்திரத்தை அறிய வேண்டியது முக்கியம். எதிர்காலச்சந்ததியினரான மாணவர்கள் நாவலர் பெருமானது உண்மைச் சரித்திரத்தை அறியவேண்டியது இன்றியமையாதது நாவலர் ஐயாவின் உண்மைச் சரித்திரத்தை அறிந்து அவர் காட்டிய ஆத்மீக வழியில் யாம் ஒழுகுதல் வேண்டும். இதுவே நாம் நாவலருக்குச் செய்யும் பெருந் தொண்டாகும். நமக்கு நல்ல வழிகாட்ட வேண்டும் என்று நல்லூர் மணி மண்டபத்தில் சிலையுருவில் வீற்றிருக்கும் நாவலர் பெருமானை இயலுமான வரை வேண்டுதல் செய்ய வேண்டும். நாவலர் பெருமான் நிச்சயம் நமக்கு நல்ல வழி காட்டுவார்"

உரும்பராய் சைவத் தமிழ்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

---

## நாவலர் தமிழையும் சைவத்தையும் வளர்க்கத் தோன்றிய அற்புத புருஷர்

" தமிழன் எங்கிருந்தாலும் அவன் இன்பத்தமிழால் இணைக்கப் படுகிறான். எத்தனை மாறுபட்ட கருத்துக்களை உடையவனாக இருந்தாலும் தமிழ் என்ற சொல்லைக் கேட்கும் போது உள்ளம் உருகப்பெறுகிறான். இனத்தால், மொழியால், மதத்தால் ஒன்று பட்டவர்கள் நாம் இந்தக்காரணத்தால்தான் ஈழத்தில் பிறந்த ஆறுமுகநாவலர் விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்குமளவுக்கு ஆங்கிலத்தில் பாண்டித்தியம பெற்றிருந்தும் ஆங்கில நாட்டுக்குச் செல்லாமல் தமிழ்நாட்டுக்குவந்தார். தமிழையுஞ் சைவத்தையும் வளர்க்க அருமபாடுபட்டார் எனவே தான் தமிழக மக்கள் ஈழத்தில் யாரை அறிந்திராவிட்டாலும நாவலரை அறிந்திருக்கிறார்கள். எவரை மறந்தாலும நாவலரை மறக்கவில்லை" இவ்வாறு குருநாகல் சைவ மகா சபையில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விழா வில உரை நிகழ்த்தும் போது தமிழ் அறிஞரும் கலைமகள் ஆசிரியருமாகிய திரு கி, வா. ஜகந்நாதன் அவர்கள் கூறினார்கள்.

15.11.70ல் வைத்திய கலாநிதி ஆ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து பேசுகையில் தமிழும் சைவமும் தமிழரின் இரு கண்கள். எனவே தான் ஆறுமுகநாவலர் தமிழையுஞ் சைவத்தையும் வளர்க்க, அழிந்துபோகாமல் தடுக்க அயராது பாடுபட்டார். நாம் அன்னியனுக்கு அடிமைப் பட்டிருந்த காலத்தில் தான் நாவலர் வாழ்ந்தார். ஆயினும் அந்த ஏகாதிபத்தியதின் குறைகளைத் தனித்து நின்று போராடினார் அப்படிப் போராடுவதற்கு அவரிடம் பணமோ பதவியோ இருக்கவில்லை. இறை அருள்தான் இருந்தது. இந்த உண்மையை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேணடும். இறைவன் அருளைப் பெற்றவன் கோழையாக இருக்க மாட்டான். வீரனாகவே திகழ்வான். இந்த உண்மை நாவலரின் வாழக்கையைப் பார்க்கும்போது எமக்குப் புலப்படுகிறது. உடலும் உயிரும்சேர்ந்து இருக்கும் போதுதான் முழுமை பெறும். அது போல் தமிழும் சைவமும் சேர்நதிருக்குமபோது தான் நிறைவுபெறும். இறைவனைப்புகழாத் தமிழ் தமிழாகாது இதை உணர்ந்தே ஆறுமுக நாவலரும் தமிழையும் சைவத்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

---

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞ கார்த்திகைமீ கஉ-உ வெள்ளிக்கிழமை [1970]

## மாணவர்களின் அதிருப்தியும் மனக் கலக்கமும்

1970—71-ஆம் வருடப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்விலும் கட்டுப்பத்தைப் புகுமுகத் தேர்விலும் முன்னெருபொழுதும் தோன்றாத பிரச்சினைகள் தோன்றி மாணவர்கள் மத்தியில் அதிருப்தியையும் மனக் கலக்கத்தையும் உண்டுபண்ணிவிட்டன. பேராதனைப் பல்கலைக் கழகப் பொறியியற் றுறைக்கு 117 தமிழ் மாணவர்கள் தெரியப்பட்டார்களெனக் கல்வி அமைச்சு வெளியிட்டபோதிலும் தற்போது ஒரு பகுதி பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கும் ஒருபகுதி கட்டுப்பத்தைக்கும் அநுமதிக்கப்படுவார்களெனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ் வருடம் கட்டுப்பத்தைக்கு 8 தமிழ் மாணவர்களே தெரிவு செய்யப் பட்டுள்ளனராம்.

வடமாகாணத்திலுள்ள மாணவர்கள் இத்தேர்வுகளில் பாரபட்சங் காட்டப்பட்டதென்பதை ஆட்சேபித்து 24-11-70 செவ்வாய்க்கிழமை பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. அன்று அம் மாணவர்கள் ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தை அமைதியான முறையில் நடத்தி ஒரு ஆட்சேபனைக் கூட்டத்தையும் நடத்தித் தங்கள் ஆட்சேபனையைத் தெரிவிக்குமுகமாகத் தீர்மானங்களைச் செய்து அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளனர்.

கொழும்புச் சர்வகலாசாலை மாணவர்களுக்கும் தேஸ்ரன் கல்லூரி மாணவர்களுக்கும் இடையில் வன்முறையான கலவரம் நிகழுகின்றதாம். கட்டுப்பத்தைக் கல்லூரியும மாணவர்கள் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து மூடப்பட்டிருக்கின்றது. பொதுவாக இவற்றின் விளைவாக எல்லாச் சர்வகலாசாலைகளிலுப் மூன்று மாதப் படிப்பு நடைபெறமாட்டாதென்றே சொல்லலாம்.

இத்தகைய குழப்பங்களுக்குக் காரணம் மேலதிகாரிகளுக்கிடையிலுள்ள ஒற்றுமைக் குறைவாகும். அவர்கள் நடுவுநிலைமை, ஒற்றுமை, பரோபகாரம், விவேகம் முதலிய பண்புகளைக் கடைப்பிடித்துச் செயலாற்றியிருந்தால் இச் சீர்கேடுகளைத் தவிர்த்திருக்கலாம். மாணவர்களது குறைகளை அவர்களே தீர்க்க வழிதேடும் நிலைமையேற்பட்டிருப்பது வருந்தத் தக்க செயலாகும், காலதாமதமின்றி மாணவர்கள் மத்தியிலுள்ள மனக்குறைகளை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் கையாளுதல் வேண்டும். அல்லது மக்கள் சமாதானமாகவும் இன்பமாகவும் வாழுதல் முடியாது. மாணவர்கள் வருங்காலச் சந்ததியினர், அவர்கள் கல்விமான்களாகவும், அறிவாளிகளாகவும் திகழ்வதற்குரிய சூழ்நிலையையும் வசதிகளையும் அமைத்து உதவுதல் அரசாங்கத்தின் கடமையாகும். தீமையை வரமுன் காப்பாற்றிக் கொள்ளுதல் புத்திசாலியின் செயலாகும். அரசாங்கம் மாணவர்களின் குறைகளை நீக்குவதற்கு உடனடியாக விவேகமுள்ள முறைகளைக் கையாளுதல் விரும்பத்தக்கது.

### யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் சாதனை

ஐ. நா. வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தையொட்டி யாழ். மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த பேச்சுப்போட்டியில் சிரேஸ்டபிரிவிலும் கனிஸ்ட பிரிவிலும் யாழ். இந்து. மாணவர் முதலிடம்பெற்றனர்.

## தினம் தொழுவாய் மனமே!

இராகம்: கரஹரப்பிரிய :: தாளம்: ஆதி

பல்லவி

ஆதிபராபரி அங்கயற் கண்ணியை
நீதொழுவாய் மனமே — தினமே (ஆ)

அநுபல்லவி

சோதி சுதந்தரி சுந்தரி கௌரி
நாத கலாவிந்து ஞானம கேஸ்வரி (ஆ)

சரணம்

தன்னடி யாருக்குத் தனிக் கணக்கெழுதி
தந்திடுவாள் தவம் தங்கிய உறுதி
இன்னே பெறுதி எண்ணிய வரமென
எல்லா உலகமும் இருந்தருள் புரிகின்ற (ஆ)

—அளவையூர், "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் கொழும்பு

(முன் வளர்ச்சி — 2)

சைவ சமயத்தவர்களுடைய வாழ்க்கைகளில் ஒருவித மாற்றத்தை வெள்ளிக் கிழமை தோறும் நடக்கும சமயப்பேசுக்கள், செய்ததனைக் கண்ட மிஷனரிமார்கள் மிகவும் பீதியடைந்தார்கள். பார்சிவல் பாதிரியாரிடம் சென்றுமுறையிட்டார்கள் ஆறுமுகம் சுயநலமற்ற சேவைகளைப பாதிரியாருக்கு அல்லும்பகலும் புரிந்து வருகின்றவராகையிஞல், மிஷனரிமார்கள் வந்து புகாரீட்டவைகளைக் கேட்டு வாழாவிருந்துவிட்டார்

அத்தியாவசியகமாக ஒரு பாடசாலை ஆரம்பிக்க வேண்டுமெனக்கண்டு, 1848ம் ஆண்டு ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்தார். அதேஆண்டு பார்சிவல் பாதிரியாரின் கீழ் தான்பார்த்து வந்த உபாத்தித் தொழிலுக்கும ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். எதிர்பாராத இந்தச சம்பவத்தைத் தாங்கமுடியாத பார்சிவல் பாதிரியார், யாழ்ப்பாணத்தைத் துறந்து சென்னபட்டினம்புக்கு, அங்கேயே தங்கித் தமிழைக் கற்றுப் பண்டிதராஞர். நல்ல வருவாய் தரக்கூடிய உபாத்திமைத் தொழிலை விட்டகாரணத்திஞல் அதிருப்தி அடைந்த ஆறுமுகத்தின் சகோதரர்களும் இவரை மிகவும வன்மையாகக் கண்டித்தனர். அதஞல் ஆறுமுகம் இனபந்துக்களைத் துறந்து விட்டார்.

ஆறுமுகம் படிக்குங் காலத்தில் நூல்கள் பல ஓலைச்சுவடிகளாவே இருந்தன. சாதாரண மக்கள் அச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களை இலகுவாகவும் பிழையறவும் கற்க முடியாத முறையில் இருந்தனர் ஆறுமுகப் பண்டிதர் அச்சுவடிளைப் பெற்றுப் பிற்காலச்சநததியினரின் நன்மையைக்கருதி அச்சு வாகனமேற்றத் துணிந்தார். அக்காலம் அமெரிக்கமிஷனரிமார்கள் தங்கள் நூல்களை

## கடவுள்ப் பணி தெய்வத் தன்மையை உண்டாக்கும்

### தருமபுரவாதீனத் தலைமை யானை அற்புதமாக மறைந்தமை

தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தான யானைகள் 9க்கும், தலைமையானயானையாகவிளங்கிவந்துள்ளதும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயிலில் 50 ஆண்டுகளாக பணிகளில் பங்குகொண்டிருந்ததுமான யானை, சில நாட்களாக நோய்கண்டு கஷ்டப்பட்டது. மருத்துவர்களைக் கொண்டு நோயை குணப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டது. முதுமைபருவமடைந்துள்ள யானையின் பிணியை நிவர்த்திசெய்ய முடியாமல் அதன்போக்கிலேயே யானையை அவிழ்த்து விடப்பட்டிருந்தது. அவிழ்த்து விடப்பட்டிருந்த யானை தனக்கு இறுதி நாள் வருவதை உணர்ந்து, திருஞானசம்பந்தர் திருக்கோயில் சந்நிதியின் வாயிலில் நின்று கொண்டே வந்தது. 4-11-70 புதன்கிழமை "கந்த சஷ்டி திருநாள் அன்று" இனிய நாள் என்பதனை உணர்ந்து இத் தெய்வீக யானை திருக்கோவிலை வலமாகவந்து ஞானசம்பந்தர் கோயில் வாயிலை மெதுவாகக் கடந்து உள்ளே சென்று ஞானசம்பந்தர் சந்நிதியில் நின்று மூன்று முறை முன்காலை மடக்கி துதிக்கையை உயர்த்தி "ஓங்காரக் குரல்" எழுப்பி வீழ்ந்து வணங்கியது வணங்கிய நிலையிலேயே இறைவன் திருவடியை அடைந்துவட்டது.

தெய்வீக யானையின் அற்புத நிகழ்ச்சியை நகரமக்கள் கேட்டு விரைந்து ஓடி வந்து பார்த்து அஞ்சலி செலுத்தினர்கள். தெய்வீக யானையின் உடல் சிறப்பான முறையில் திருவீதிவலம் கொண்டுவரப்பட்டு அடக்கம் நடைபெற்றது.

#### வீரச் சங்கிலி, பதக்கம் பெற்ற யானை

இத்திருக்கோவிலில் சில ஆண்டுகளுக்குமுன், விமான கலசத்தைக் களவாடவந்த கள்வனைக் கண்டு குரல் கொடுத்து திருக்கோயில் சிப்பந்திகளை ஓடிவரச் செய்து கள்வனைச் காட்டிக் கொடுத்துள்ளது. தமிழக அரசினர் இவ்யானையின் செயலைப் பாராட்டி வீர சங்கிலியும் பதக்கமும் பரிசு வழங்கியுள்ளார்கள்.

தெய்வீக யானைக்கு ஒரு நாள் பாகன் தீனி (உணவு) வைத்திருந்த போது அதில் கொஞ்சம் வெளியில் சிந்தியது காக்கைகள் வந்து சிந்திய அரிசியை பொறுக்கித் தின்றன. யானையின் காலின் அடியில் சிதறிக் கிடந்த அரிசியை காக்கைதின்று வெளியில் செல்லும் வரை தன்னுடைய காலை தூக்கியபடியே நின்றிருந்து கருணையைக் காட்டியுள்ளது

- (எமது சிதம்பரம் நிருபர்)
திரு. மா. பாலசுப்பிரமணியன்

## சிவபூஜாதுரந்திரராய் கைம்மைவிரதம் அநுட்டித்த அம்மையார்

காரைநகர், களபூமி காலஞ்சென்ற திரு. வேலுப்பிள்ளையென்பவரின் பாரியாரும், காலஞ்சென்ற திரு. இ வைத்திலிங்க விதானையாரினதும் வேலனை மேற்கு, திரு. ஞானசம்பந்த பிள்ளை சிவகாமசுந்தரியினதும் சகோதரியுமாகிய தெய்வயானையென்னும் அம்மையார் கார்த்திகை மூ 1 ஆம் திகதி சோமவாரத்திலன்று தமதில்லத்திற் சிவபதமடைந்தனர். விவாகஞ்செய்து ஒன்றரை வருடத்திற்குள் கணவன் சிவபதமடைந்தபின் அம்மையார் சிவபூசையெழுந்தருளப்பண்ணி கைம்மைவிரதம்பூண்டு தவவாழ்க்கை வாழ்ந்தார்கள். பல முறை சிதம்பரம் திருச்செந்தூர் முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்துள்ளார். விரதங்களை முறையாக அநுட்டித்துவந்தார். இடையறாது திருமுறைப் பாராயணம் சிவசிந்தனையுமுடையவராய் வாழ்ந்தார். அம்மையாருடைய தாயாரும் ஒரு சிவபூஜாதுரந்தரர்.

வேதாரணியம் ஸ்ரீமத் ச. செல்லக்கணபதிக் குருக்கள் அம்மையாருடைய ஈமக்கிரியைகளை முறையாகச் செய்து வைத்தனர். அம்மையாருடைய ஆன்மா நடராஜப்பெருமானுடைய குஞ்சித பாதத்திற் சேர்வதாக.

### மெய்கண்டதேவநாயனுர் திருக்கோயிலில்

மெய் கண்ட தேவ நாயனுர் அவதரித்த பெண்ணாகடம் களப்பாளர் மேட்டில் உள்ள மெய் கண்ட தேவநாயனுர் திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 13, 14, 15 – 11 – 70 ஆகிய மூன்று நாட்களிலும் நடை பெற்றன. இவ்வைபவத்தையொட்டி தமிழ்நாடு தெய்வீகப் பேரவை சமயப் பிரசாரமும் திரைப் படக் காட்சியும் விகழ ஒழுக்கு செய்தன

அச்சிடுவித்தே உபகரித்தனர், சைவநிந்தனை முதலாம் சிவதூஷணைகளை ஆயிரக்கணக்காகப் பதிப்பித்து மக்களிடை விநியோகித்தனர். இத்துண்டுப் பிரசுரங்கள் மக்களிடை பெரிய

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

### நாவலர் பெருமானது

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

வித்தியாசாலையில் நாவலர் வாரத்தையொட்டி நடைபெற்ற பிரார்த்தனையில் நாவலர் விழாவை ஆரம்பித்து வைத்துப்பேசிய ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

பாலசுப்பிர மணியர் திருக்கோயில் அரங்கில் நடைபெற்ற இவ் விழாவில் வித்தியாலய அதிபர் திரு. கு.சபாரத்தினம் பேசுகையில் "நாவலர் பெருமான் நமக்கு நல்ல வழி காட்டியாய் இருந்தார். சிறியவர்கள் தொடங்கிப் பெரியவர்கள்வரை கற்றுப் பயனடையக்கூடிய சைவ விஞவிடைகள், பெரிய புராண வசனம், இலக்கணச்சுருக்கம் முதலாம் எண்ணிறந்தநூல்களை ஆக்கி அளித்துள்ளார். நாவலர்பெருமானது உயர்ந்த தொண்டுகளை யாம் கடைப் பிடிக்க வேண்டியது மிகவும் முக்கியம் அப்பொழுது தான் யாம் அவரைப் பின்பற்றுகிறோம். என்று சொல்லும் உரிமையையும் பெற முடியும் நாவலர் பெருமானது தொண்டுகளைப்பாராட்டி யாம் எத்தனை விழாக்கள் எடுத்தாலும்,நாம் எடுக்கும் விழாக்கள் அவரது தொண்டுக்கு ஈடாகாது"என்ருர்.

மாணவர்களது பேச்சரங்கு நிகழ்ச்சியில் செல்வர்கள் பார்த்திபன், அட்சயமூர்த்தி, நிமலன், செல்வி ஜெயராணி ஆகியோர் கலந்து கொண்டு நாவலர் பெருமான் நற்றெண்டுபற்றி உரையாற்றி அனைவரதும் பாராட்டுதல்களைப் பெற்ருர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

### நாவலர் தமிழையும்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

தையும் சேர்த்து வளர்த்தார். நாவலர் பேச்சு எழுத்து இரண்டிலும் சிறந்தவர். அத்துடன் செயல் வீரருங் கூட. சொல்வது போல் எவரும் நடப்பதில்லை. நாவலர் சொல்லுவதுபோல் நடந்துங் காட்டிஞர் இறுதி மூச்சு வரை எமக்காக வாழ்ந்த நாவலரை நாம் மறக்க முடியுமா?.

ஆறுமுக நாவலர் தமிழகத்துக்கும ஈழத்துக்கும் கலங்கரை விளக்கமாக விளங்குகிருர். தமிழும் சைவமும் வளர்ந்து இதஞல் மனிதனும், உலகமும் வளர உழைத்தவர் நாவலர். அவர்காட்டிய இலட்சிய வழியில் நாமும் முன்னேறிச் சென்று வாழ்க்கையின்பயனைப்பெற இன்று தீர்மானம் பூண்டு கொள்வோமாக. இதுவே நாம் நாவலருக்குச் செய்யும் நன்றிக்கடன்".

## கொழும்பு விவேகானந்த சபை நடாத்திய பேச்சுப் போட்டி

( 1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

கீழ்ப்பிரிவு: (பேச்சுவன்மை)

1ம் பரிசு: த. சிவமணி, மட்டக்களப்பு வின்சர் மகளிர் கல்லூரி, 2ம் பரிசு: நா. இலகுதாஸ், கோட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயம், 3ம் பரிசு: இ. மங்களேஸ்வரி, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை

மத்திய பிரிவு: (பேச்சுவன்மை)

1ம் பரிசு: வி. கிரிதரன், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, 2ம் பரிசு: ப. சங்கரவடிவு, கொட்டாஞ்சேனை நல்லாயன் அரசினர் தமிழ்ப் பெண்கள் பாடசாலை, 3ம் பரிசு: ப. விசுவலிங்கம் பன்விலை அ த. க. பாடசாலை.

மேற்பிரிவு: (பேச்சுவன்மை)

1ம் பரிசு: வே. ஞானசுந்தரபகவதி நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயம், 2ம் பரிசு: த. சிவசோதி, மட்டக்களப்பு தெய்வநெறிக் கழகம், 3ம் பரிசு: க. பாமேஸ்வரி, பன்விலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

கீழ்ப்பிரிவு: (கட்டுரை)

1ம் பரிசு: கி. சிவபாலன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 2ம் பரிசு: சி மனோரஞ்சனி மட்டக்களப்பு வின்சர் மகளிர் கல்லூரி, 3ம் பரிசு: த. கிருஷ்ணவேனி. முள்ளியவளை தண்ணீருற்று சி. சி. வித்தியாலயம்.

மேற்பிரிவு: (கட்டுரை)

1ம் பரிசு: க. பாரிஜாதம், பன்விலை அ. த. க. பாடசாலை 2ம் பரிசு: நா. மங்களவேனீ, நாவலப்பிட்டி பரியந்திரேய மகளிர் வித்தியாலயம். 3ம் பரிசு: சே. முருகையா, லுணுகலை தமிழ் மகா வித்தியாலயம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கந்தையா சிவசம்பு, கோவளம் காரைநகர் —வழக்காளி

இல: M B 9772 எதிராக

1 செல்லத்தம்பி திருச்செல்வம் அவரது மனைவி

2 கனகமணி இருவரும் பெரியவிளான்,

யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9772 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஹு டிசம்பர் மாதம் 18-ந் திகதி (18-12-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 1785/-க்கு 2?-2-68 தொடக்கம் 15-1-69 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் இதில் கழிவு ரூபா 1425/- (15—7—69ல் செலுத்தியது ரூபா 700/- பெப்ரவரி 1970ல் செலுத்தியது ரூபா 600/- 15-3-69ல் கோட்டுச்செலவு செலுத்தியது 125/-)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணக் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பெரிய விளானிலுற "ஓடை" பா. நி. இலா. 4½ ஷை பா. நி. இலா. 4½ இரு பிரிவுகளுஞ் சேர்த்து நிலப்பரப்பு (9) ஒன்பது இதில் தெற்குப் பக்கமாக அரைவாசி நிலப்பரப்பு நாலரை (நி. பா 4½)யும் மனைகள் வடவிகளும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு லீம்பா பெண் ஞானம்மாவினுதனம், வடக்கு இதன் மிகுதி ஆதனம், மேற்கு இரத்தினம் பெண் இராசம்மாவினுதனம், தெற்கு ஒழுங்கை முகப்பும் கார்த்திகேசு பெண் நல்லம்மாவினுதனம். இதடங்கலும் வடமேற்கு காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும். வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். ஆனுல் இக்காணியின் மேற்கெல்லையருகாக வடக்கெல்லைக் காணிக்கும் கிணற்றுக்கும் போக்கு வரவு பண்ணும் நாலுமுழ அகலக் கையொழுங்கைப் பாவிப்புரித்தும் புறநீங்கலாக,

க. சிவஸ்கந்தா

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

மதிப்பாளரும்,

நாகேந்திரமடம்,

வட்டுக்கோட்டை. 9-11-70 எம். 402 27.11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோட்டடி யாழ்ப்பாணம் முருகேசு சின்னக்குட்டி பெண் அன்னம்மா — வழக்காளி

வழ: இல M. B. 4906 எதிராக

நாவாந்துறை வண்ணர்பண்ணை மேற்கு

1. அருளப்பு நீக்கிளஸ்சும் பெண் 2. மாரியம்மா (முதலாம் எதிரி தனக்காகவும் தனது காலஞ்சென்ற பெண் 2-ம் எதிராளியின் தத்துவ பிரதிநிதியாகவும். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திக் கோட்டின் M B 4906 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஹு மார்கழி மீ 18-ம் திகதி (18-12-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தோகை:— முதல் வட்டி நுபா 2,554/-ம் 28-6-62 தோடக்கம் 4-3-66 வரைதுதும் நுபா 1,600/-ச்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தோகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் சேலவு நுபா 453-16. இதில் நுபா 2000/- வட்டி முதல் கணக்காலும் நுபா 250/- கோட்டுச் சேலவுக் கணக்காலும் கோடுப டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணை கோவிற்பற்று வண்ணர்பண்ணை தேன் மேற்கு இறை "தம்பலையடி" பர. நில. இலா 1-9. 6 குளி இதில் பிரிவிடப்பட்ட பர. நில. இலா. 0-6. 9 குளி வீட்டில் ½ பங்கும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் சுவாமிப்பிள்ளை சில்வேஸ்தர் மரியதாசும் பெண் அன்னுசிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு றேட்டு, தெற்கு ஒழுங்கை.

20, பெருமாள்கோவில் வடக்கு ஒழுங்கை. யாழ்ப்பாணம், 3-11-70

நா. ஸ்ரீஇரங்கநாதன்

கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

எம், 403 27-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10319

மைக்கல் ஞானப்பிரகாசமும் பெண் பபிலோனியாவும் பாஸையூர் யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

முத்துராசா நடராசாவும் பெண் மரியம்மாவும் பாஸையூர் யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10319ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1970-ம்ஹு டிசம்பர்(மார்கழி) மீ 9-ம் திகதி (9-12-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபாய் 4155/-ம் 24-9-68 தொடக்கம் 18-6-69 வரைக்கும் ரூபா 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 402/90ம் இம் முழுத்தொகையிலும் ரூபா 1175/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக் குளி கோவிற் பற்று, சுண்டுக்குளியில் உள்ள "சிறுவக்கியற்கடி" என்னும் 2,1/2 லிலப் பரப்பு ஆனுல் 22-2-58ல் சேவையர் ஜே மனுவேல் அளந்த 728ம் இலக்க பிளானின்படி 2 பரப்பும் 3¾ குளியும் இதில் ஒற்றுமைப் பிரிவிடுதலின் படி இப்பிளானின் 3ம் துண்டாகிய எதிராளியினரது 13¼ குளி லிலமும் அதுள் அடங்கிய கல்வீடும் குசினியும் வான்பயிர் வளர்பயிர்களும. இதற்கு எல்லை, கிழக்கு றேட்டு. வடக்கு-நல்லையா பெரியராசாவுகுரிய 2-ம் துண்டு ஆதனம். மேற்கு- குருசு யேக்கப்புவினது ஒழுங்கையும், தெற்கும் ஒழுங்கை. இது அடங்கலிலும்.

சோ. நரசிங்கம் J. P.

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

தொல்புரம், மதிப்பாளரும்.

22-10-70 எம் 401 27-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 11351

1. நாகலிங்கம் அம்பலவாணரும்
2. பெண் ஞானம்பிகை இருவரும் வட்டுக்கோட்டைமேற்கு —வழக்காளிகள்

எதிராக

நாகலிங்கம் அப்புத்துரை வட்டுக் கோட்டை கிழக்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11351 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆ மார்கழி மாதம் 17-ஆம் திகதி (17-12-70) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 880/-ம் 3-1-70 தொடக்கம் 15-5-70 வரைக்கும் ரூபாய் 600/-க்கு 12வீத வட்டியும் அதற்குப் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபாய் 248/10 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுங் கோட்டை மேற்கிறை "கலக் கலா சிட்டி" இதன் லிலப்பரப்பு 11 குளிகள் 3⅞ம் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர் வகைகளும் எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் இரத்தினத்தின் ஆதனம், வடக்கு செல்லர் கந்தையாவுக்கும் பங்காளர்களுக்கும் நீலன் கைம்பெண் இலெட்சுமிக்குமுரிய ஆதனங்கள். மேற்கு அரியகுட்டி பண்டாரியின் ஆதனமும் ஒழுங்கையும், தெற்கு பளனி கணபதியின் ஆதனம், இதடங்கலும் இவ்வெல்லைகளுக்குள் தெற்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் தூர்வை லிலமும் வழி வாய்க்கால் உரிமையும்.

வே. கோபாலபிள்ளை

Commissioner of Sales

கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

22, ஆஸ்பத்திரி வீதி.

யாழ்ப்பாணம், 11-11-70.

எம். 397 27-11-70.

---

## அறிவித்தல்

### நொத்தாரிஸ்மார் சட்டம் 107ம் அத்தியாயம் 7ம் பிரிவின்படியான அறிவித்தல்.

அளவெட்டி, காளியவத்தை வல்லிபுரம் தம்பிப்பிள்ளை ஆகிய யான் யாழ்ப்பாண மாவட்டத்தின் தமிழ் நொத்தாரிஸ்வாகக் கடமைபார்க்க என்னை நியமிக்கும்படி இத் திகதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்பு பதிவு காரியவதிர் தலைவர் அவர்கட்கு விண்ணப்பஞ் செய்யவிருக்கிறேன் என்பதை அறிவிக்கிறேன்.

காளியவத்தை, வ. தம்பிப்பிள்ளை

அளவெட்டி. 23-11-70 எம். 404 27-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. வேலன் கிருஷ்ணன் — சிறுவிளான் தற்போது மலேசியா அவரது தத்துவ அதிகாரி (Attorney) அவரது மனைவி செல்லம்மாவாலும்
2. மனைவி செல்லம்மா, சிறுவிளான் —வழக்காளிகள்

இல: M B 9942 எதிராக

1. பொன்னம்பலம் சொர்ணலிங்கமும் மனைவி
2. பூரணம், மதிமேனி அச்சுவேலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9942-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஹு மார்கழி மீ 16-ம் திகதி (16-12-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 8820 - 50 சதமும் 28-4-1968 தொடக்கம் 6-5-1969 வரைக்கும் ரூபா 6000/-க்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 455ம் 90 சதமும்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் துனுக்காய் பகுதி பச்சிலைப்பள்ளி கோவிற்பற்று முாசுமோட்டை "முாசுமோட்டைக் காடு" விஸ்தீரணம் 23 ஏக்கர் 29 பேர்ச் இதில் தெற்குப்பக்கமாக சீதனமாகக் கொடுக்கப்பட்ட 8 ஏக்கர் தவிர்த்து மிகுதியில் தெற்குப் பக்கமாக 5 ஏக்கர் இன் 5 ஏக்கருக்கும் எல்லை கிழக்கு வாய்க்கால் ஒதுக்கிடம், வடக்கு இக் காணியின் மிகுதிப் பாகம, மேற்கு: கனகராயன் ஆற்றுப்பாவல். தெற்கு பாமேந்திரனின் மனைவி கோமேஸ்வரியின் ஆதனம், இதடங்கலும்.

பதிவு இல: L 4/72

நித்திபகல்யாணி"

பலாலி றோட்.

திருநெல்வேலி வடக்கு,

யாழ்ப்பாணம், 25-10-70.

அ. சிவானந்தன்

கொமிஷனர் & விலை மதிப்பாளர்

எம். 399 2-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 10021

பவிலுப்பிள்ளை யோசப் எமானுவேலும் பெண் மாரியம்மாவும் மாரீசன் கூடல், இனவாலை. — வழக்காளி

எதிராக

காலஞ்சென்ற வைத்திலிங்கம் சரவணமுத்துவும், சரவணமுத்து செல்லத்துரையும், அல்லைப்பிட்டி, — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B-10021 ஆம் இலக்க வழக்கின்படி எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஹு மார்கழி மாதம் 3-ம் திகதி (3-12-70) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 3675/-ம் 1-6-68 தொடக்கம் 21-3-69 வரைக்கும் ரூபா 2000/- க்கு 15 வீத வட்டியும் (மொத்தம் ரூபாய் 4000/--க்குள் அடங்க) அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 433 - 86 சதமும் இதில் ரூபா 200/-கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

1. வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவில்பற்று அல்லைப்பிட்டியில் உள்ள "ஓடை-வயல்" என்னும் ஒரு ஏக்கர் 9 பேச்சஸ் காணி. இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் சிவப்பிரகாசபிள்ளை நாகலிங்கத்திற்கும் சிவப்பிரகாசபிள்ளை சிவஞான சம்பந்தருக்கும் உரிய காணிகள். மேற்கு - ஒழுங்கை. தெற்கு-சின்னையா கந்தையாவும் பங்காளரினதும் ஆதனம். பதி. இல. சி. 217/168.

2 மேற்காட்டியபடி அல்லைப்பிட்டியில் உள்ள சயுண்டபாயும் துண்டுகளும் நெற் காணி 25, 5/16 பரப்பும், இதற்கு எல்லை கிழக்கு வல்லிபுரம் ஆறுமுகமும் பங்காளரினதும் ஆதனம், வடக்கு- சின்னத்தம்பி வைத்திலிங்கமும் பங்காளரினதும் ஆதனம் மேற்கு-மார்க்கண்டு பெண் சிவலோகலட்சுமியின் ஆதனங்களும் தெற்கு-றோட்டும். பதிவு இல. சி 139/81ம் சி, 130/287.

3. மேற்காட்டியபடி அல்லைப்பிட்டியில் உள்ள உச்சங்கேணி என்னும் 5, 3/8 லிலப் பரப்பும் கிணறும். இதற்கு எல்லை கிழக்கு வேலுப் பிள்ளை செல்லத் தம்பியின் ஆதனம், வடக்கு சின்னத்தம்பி கைம் பெண் தெய்வானையின் ஆதனம். மேற்கு-முருகேசு கணபதிப்பிள்ளையின் ஆதனம்; தெற்கு - வண்ணூர் பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆதனம். இது அடங்கலிலும் சொரியலாக அரைவாசி. பதிவு இல. சி. 201/211.

சோ. நரசிங்கம் J. P.

நீதிமன்றவிற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்

தொல்புரம். 22-10-70

M 400 27—10—70

---

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக......

(2- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

சூறுவளிக்குழப்பத்தை உண்டு பண்ணின. அதனுல் ஆறுமுகம் கோதித்தெழுந்தார். மனம் நிம்மதியடையாது வேதுமபினுர். ஆகவே அச்சுயந்திரம் பெறுவதற்காகச் சென்னபட்டினம் சென்றுர். (வளரும்)

## NOTICE OF SALE
## தத்துவ வழக்கில் விடப்பட்ட கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்டக் கோட்டில்

கரவெட்டி வடக்கு காலஞ்சென்ற விசயரத்தினம் வயித்திலிங்கம் பெண் பாக்கியத்தின் ஆதனத்துக்கு

**தத்துவ வழக்கு இலக்கம்: 934.**

கரவெட்டி வடக்கு 1. கந்தையா செல்லத்துரையும்
2. பெண் நாகரத்தினமும் —தத்துவகாரர்.

எதிராக

கரவெட்டி வடக்கு (1) வயித்திலிங்கம் மகள் சிவயோகம் மறுநாமம் பவானி

பராயமற்றவர்கள்:
(2) வயித்திலிங்கம் மகள் இராசயோகமலர் மறுநாமம் அம்பிகா
(3) வயித்திலிங்கம் மகள் தேவயோககமலாம்பிகை மறுநாமம் சந்திரா
(4) வயித்திலிங்கம் மகள் இராசயோக கமலாம்பிகை மறு நாமம் இராணி

கரவெட்டி வடக்கு (5) நாகநாதர் இராசரத்தினம்
2-ம் 3-ம் 4-ம் எதிரிகள் பராயமற்றவர்கள் அவர்களின் பராபரிப்புக்காரன் 5-ம் எதிரி — எதிரிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படி இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1970-ம் ஆண்டு மார்கழி மீ 30-ந் திகதி (30-12-70) புதன் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று

1. கரவெட்டி குறுளிக் குறிச்சியிறை அம்புலியப்புலம் வி. ப 11, 1/8 ஷை வி. பர, 2. 1/8 எல்லை கிழக்கு செல்வ விநாயகம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு காலஞ்சென்ற வயித்திலிங்கம் பெண் பாக்கியத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு தம்பிராசா பெண் சின்னம்மாவுக்குடையவாதனம். தெற்கு சுப்பிரமணியம் பெண் செல்லம்மாவுக்குடையவாதனம். இதில் சொரியலாய் 1/8 பங்கும்.

2 ஷையிறை பற்பை வி. பர. 14, 3/4 இது 1921-ம் ஞு மார்கழி மீ 26 ந் உ உலாந்தா மேஸ்தர் G. C. க. கணபதிப்பிள்ளையால் 5382 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின் படி வி பர 16 குளி 15, 29/32. இதில் குறித்த படத்தில் 4ம் நம்பர்த் துண்டுக்கு வில பர 3 குளி 23/32 எல்லை கிழக்கு சின்னத்தம்பியார் ஆறுமுகத்துக்குடையவாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு சுப்பிரமணியம் பெண் செல்லம்மாவுக்குடையவாதனம். தெற்கு சின்னத்தம்பி செல்லத்துரைகுடையவாதனம். இது முழுவதும்.

R. S. இராமநாதன்
கொம்மிசனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்
Commissioner of Sa.e & Valuer and Auctioneer

"உமாபதி"
தும்பளை, பருத்தித்துறை,
23-11-70
எம். 396 27—11—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழக்கு இல: 10558

1 அம்பலவாணர் சரவணமுத்து
2 பெண் நாகம்மா, கரணவாய் வடக்கு, —வழக்காளிகள்

எதிராக

சிவகுரு சதாசிவம், கரணவாய் வடக்கு, தற்காலம் இல: 93 யூனிற் 2 சேமமருதகுளம், தத்துவகாரன் இறந்த, கரணவாய் வடக்கு, வேலுப்பிள்ளை சிவகுரு பெண் தங்கம்மாவின் ஆதனத்திற்கு —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1971ம் ஞு தைமீ 17ம் திகதி (17-1-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் கொலுருவத்தைக் குறிச்சி "கோயிலான் கூடல்" நி பர. வீடு 1 ஷை நி. பர. 15 ஷை நி. பர. $5\frac{1}{2}$ இவைகளில் நி. பர. 10 குளி $8\frac{1}{4}$ நீங்கலாக மிகுதிக்கு தெற்குப் புறமாக நி. பர. 11 குளி $6\frac{3}{4}$ இதற்கு அளவைப்படியும் ஆட்சிப்படியும் நி. பர. 14 இதில் பிரிவிட்ட படியும் ஆட்சிப்படியும் நடுப்பெற 2ம் துண்டு நி. பர. $3\frac{1}{2}$ எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் தெய்வானைக்குரிய ஆதனம், வடக்கு தெரு, மேற்கு கதிர்காமர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு வல்லிபுரம் தினகரிப்பிள்ளைக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் மாமரங்கள் முழுவதும். பதிவு இல: 175/21

| | |
|---|---|
| (இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூபா 4850/-) | |
| இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட ரூபா | 2100-00 |
| ரூபா 1500/-க்கு 10 வீதம் 5-7-69 தொடக்கம் 14-5-70 வரை 10 மாதத்திற்கு | ரூபா 125-00 |
| ரூபா 2225/-க்கு 5 வீதம் 15-5-70 தொடக்கம் 23-10-70 வரை | ரூபா 46-35 |
| செலவு தொகை | ரூபா 310-94 |
| மொத்தம் | ரூபா 2582-29 |

கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 394, 27-11-70

சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
21-11-70

---

## Commission Salé
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 9867

அல்வாய் தெற்கு, சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் —வழக்காளி

எதிராக

நாகர்கோவில், சின்னையா சின்னத்தம்பி — எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்களை 1970ம் ஞு மார்கழி மீ 26-ஆம் திகதி (26-12-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி குடத்தனைக் கோவிற்பற்று,

1. நாகர்கோவில் இறை, கலப்பைவெட்டி மூன்று பிரிவுகளும் நி. பர. $17\frac{3}{4}$ இதில் கிழக்கரைவாசிக்கு நி. பர. 8, 7/8 பனைகள். தென்னைகள் புளியமரம் இவைகு துரவும் எல்லை கிழக்கு வயிரமுத்து கதிரேசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு மண் தெரு, மேற்கு அப்பாக்குட்டி தெய்வருக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு வயிரமுத்து பெண் மனோன்மணிக்கும் மறுபேருக்குமுரியவாதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் இருபத்துநாலிலைந்து பங்கும்.

2. ஷை இறை வடலிக்கூடல் இரண்டு பிரிவுகளும் குடியிருப்பு இரண்டு பிரிவுகளும் குச்சஒடையும் நி பர $9\frac{1}{4}$ வீடு $\frac{1}{4}$ கூடிய நி. பர. 9 குளி $10\frac{1}{2}$ தென்னைகள் பனைகளும் எல்லை கிழக்கு கந்தையா சின்னப்பொடியருக்குரியவாதனம், வடக்கு சுப்பர் வேலாயுதருக்கும் மறுபேருக்குமுரியவாதனம். மேற்கு சின்னையா கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு சுந்தர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் நாற்பத்து நாலிலைந்து பங்கும்.

3. ஷை இறை சம்புக்கேணி வயல் நெற். பர 30 இதில் மேற்கரைவாசிக்கு நெற். பர, 15 எல்லை கிழக்கு வயிரமுத்து கதிரேசுவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். வடக்கு இராமு சின்னையாவின் உரிமைக்காரருக்குரியவாதனம். மேற்கு சின்னத்தம்பி வேலாயுதருக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு ஞேட்டு, இதிற் சொரியலாய் இருபத்துநாலிலைந்து பங்கும்.

4. ஷை இறை அத்தியடியில் வயல் நெற். பர. 23, 3/8 எல்லை கிழக்கு சின்னத்தம்பி வேலாயுதருக்கும் மறுபேருக்குமுரியவாதனம். வடக்கு மூத்ததம்பி கைம்பெண் நாகமுத்துவுக்கும் மறு பேருக்கு முரியவாதனம், மேற்கு முருகர் பெண் சிவக்கொழுந்துவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு: ஞேட்டு இதிற்சொரியலாய் இருபத்துநாலில் ஆறுபங்கும்,

5. ஷை இறை விளாம்புவயல் நெ பர. 12 எல்லைகிழக்கு சதாசிவம் பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு முருகர் தில்லைநாதருக்கும் மறுபேருக்குமுரியவாதனம். மேற்கு வேலாயுதர் தாமோதரத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனம்: தெற்கு ஞேட்டு, இதிற் சொரியலாய் இருபத்துநாலில் ஒன்பது பங்கும்.

6. ஷை இறை சம்புக்கேணி வயல் நெற், பர. 33 குளி $3\frac{1}{2}$ எல்லை கிழக்கு சின்னத்தம்பியார் வாரித்தம்பிக்கும் மறுபேருக்குமுரியவாதனம், வடக்கு நாகர்கோவிலில் நாகதம்பிரான் கோயிலிருக்கும் ஆதனம், மேற்கு சின்னர் பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு பண்டாரியார் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரியவாதனம், இதிற் சொரியலாய் ஆயிரத்து நூற்றைம்பத்திரண்டில் அறுபத்துமூன்று பங்கும்.

7. ஷை இறை வடலிக்குளம் நி. பர. 1 தென்னைகளும், எல்லை கிழக்கு சுந்தர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம், வடக்கு வேலாயுதர் வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனம், மேற்கு சின்னத்தம்பியார் பெண் குஞ்சு நாச்சனுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு சின்னையா கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்குரியவாதனம், இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் இருபத்துநாலிலெண்பது பங்கும்.

8. ஷை இறை ஆலோடு கொட்டுவயல் மூன்று பிரிவுகளும் நெ. பர. 49, 3/8 எல்லை கிழக்கு வேலாயுதர் தாமோதரத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனம், வடக்கும் மேற்கும் வயிரமுத்து பெண் மனோன்மணிக்கும் மறுபேருக்குமுரியவாதனம் தெற்கு ஞேட்டு, இதிற் சொரியலாய் தொண்ணூற்றுறில் ஒன்பது பங்கும்.

வழக்கு வைத்த திகதி வரையுமுள்ள

| | | |
|---|---|---|
| முதலும் வட்டியும் சேர்ந்ததொகை | ரூபா | 2000-00 |
| ரூபா 2000/-க்கு வட்டி 12-12-67 ல் இருந்து 12-10-70 வரைக்கும் 5 வீதப்படி | | 283-00 |
| செலவு — — | | 211-31 |
| மொத்தம் | ரூபா | 2494-31 |

R. S. இராமநாதன்,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்.
Comisioner of Sales, Auctioneer & Valuer
எம். 355. 13—11—70

"உமாபதி"
தும்பளை, கெல்லண்டை ஞேட்.
பருத்தித்துறை,
2—11—70

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 27—11—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 9969

காரைநகர் வடக்கு,
வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் —வழக்காளி

எதிராக

1 வேலுப்பிள்ளை முத்தையாவும்
2 பெண் ஷண்முகவல்லியும்
இருவரும், புங்குடுதீவு மேற்கு, —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 9969-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1971-ம் ஞு தை மீ 3-ம் திகதி (3 1-71) ஞாயிற்றுக் கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1548/- இன்னும் ரூபாய் 1200/-க்கு 18-5-68 தொடக்கம் 24-1-70 வரைக்கும் 12% வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 343-20 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் புங்குடுதீவுக்கோவிற்பற்று புங்குடுதீவு இறை "துணிபன்காடு" பர. நி. இலா. 11 – 0 வான்பயிர்களுடன் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு காசிப்பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு காலஞ்சென்ற முத்துக் குமாரு நாகலிங்கத்தி னுரிமையாளரின் ஆதனம். தெற்கு உபயோக மற்ற தரவை.

செ. விசாகரெத்தினம்
கொம்மிஷனர்& விலைமதிப்பாளர்,
133 பருத்தித்துறை ஞேட்டு.
நல்லூர் யாழ்ப்பாணம் 20-11-70
எம். 398 27 - 11 – 70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10001

1. அருணாசலம் கதிரவேலு
சுளிபுரம் —வழக்காளி

எதிராக

1. ஆறுமுகம் கதிரவேலுவும்
2. பெண் மாரிமுத்துவும்
3. கிறிஷ்ணர் கந்தசாமியும்
4. பெண் வள்ளியாச்சியும்
நால்வரும் சுளிபுரம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B10001ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1970-ம் ஆண்டு மார்கழி மீ 16ம் திகதி (16-12-70) புதன் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 3353/73ம் 27-5-68 தொடக்கம் 28-5-69 வரைக்கும் ரூபாய் 2170/-க்கு $8\frac{1}{2}$ வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 290/02 சதமும்.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி –சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை "உழுத்தோலை" வி. பர. 3, 1/2. வீடுகளும் பனைமரங்களும் மேற்கெல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் தரவை பாவிப்புரிமையுடன், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு மாணிக்கம் பெண் சின்னர்மாவின் ஆதனம். மேற்கு சுப்பர் பெண் மாணிக்கத்தின் ஆதனம், தெற்கு கோவிந்தர் இராமுவுக்கும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம்.— பதிவு: யாழ்ப்பாணம் E 318/205..

J. A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 18-11-70
M 393 27-11-70